gistered No. M. 2330
"SIDDHANTHAM"
Vol. 39—No. 9

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 39 | பராபவ புரட்டாசி 1966 செப்டம்பர் | இதழ்

உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சமயப் பிரசாரம் ... | 221 |
| எட்டாந் திருமுறை யாது? ... | 224 |
| வேட்டுவ வரி கூறும் தமிழர் வழிபாடு ... | 228 |
| அடியார் பெருமை ... | 231 |
| சூரிய பூசை ... | 240 |
| திருமந்திரம் அரிய உரை ... | 244 |
| அருள்மொழியரசு வாழ்க ... | 248 |
| மதிப்புரை ... | 251 |


பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரநா
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4,
ஆண்டுச் சந்தா ரூபா 3
தனிப்பிரதி 25 கா

Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 39 | பராபவ புரட்டாசி 1966 செப்டம்பர் | இதழ் 9

## சமயப் பிரசாரம்

(துணையாசிரியர்)

நம் இந்திய நாடு பல சமயங்களைக் கொண்ட நாடு. ஆகையால் இன்னமதச் சார்புடையது என்றில்லாமல் மதச் சார்பற்ற நாடு என்று சொல்லிக் கொள்கிறது. இதனால் அரசியலாரே மதத்தை வளர்க்கும் பணியில் ஈடுபட வாய்ப்பில்லை. முன்னர் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்து கிறித்தவம் அவர்கள் சமயம் ஆதலின் அச்சமயத்திற்கு அளித்த ஏற்றம் கூறும் தரமன்று அம்மதத்துக்கு மாறினால் மண், பெண், பொன், வேலை வாய்ப்பு முதலிய சலுகைகள் கிடைத்தன. அதனாலேயே கூட்டம், கூட்டமாக மக்கள் அம்மதத்தைத் தழுவலாயினர். தற்போது வேறு பல்லாற்றானும் சிறப்பாகக் கிறித்தவரும் பொதுவாகப் பிற மதத்தவரும் தங்கள் தங்கள் சமயத்தைப் பரப்பி மக்களைச் சேர்த்த வண்ணமாகவே இருக்கின்றனர். "இராமன் ஆண்டாலென்ன; இராவணன் ஆண்டாலென்ன?" என்று பராமுகமாகச் சிறிதும் அக்கறை கொள்ளாது தற்போதிருந்து விட்டுப் பின்னர் நம் சமயத்தினர் வருந்துவதில் பயனில்லையன்றோ!

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்பது திருக்குறளாரின் தெளிந்த அறிவுரையாகும் ஆகவே நம் சமயத்தை நாமே கட்டிக் காக்கும் பொறுப்புடையரா யிருக்கின்றோம். அவ்வாறு காப்பதற்குரிய வழிகளில் மிகவும் தலை சிறந்தது நம் சமய உண்மைகளைப் பாமர மக்கள் மனத்திலும் படிந்துறையச் செய்யும் சமயப் பிரசாரமேயாகும்.

கிறித்தவர் சமயப் பிரசாரத்திற்கு என்றே பல குழுக்களை நியமித்துள்ளனர். பல இன்னிசைக் கருவிகளுடன், மக்கட் கூட்டம் இருக்கின்றதோ இல்லையோ அதைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாது நாற்சந்தியிலோ முச்சந்தியிலோ நின்று, அக்குழுவினர் பாடுகின்றனர். சிறிது கூட்டம் கூடியதும் தங்கள் மதப் பெருமைகளைப் பேசத் தொடங்குகின்றனர். இது நம் தேவாரக் கோஷ்டியின் பிரதிபலிப்பாக அவர்கள் மேற்கொண்ட செயலாகும். நாம் பஜனையை யெல்லாம் கைவிட்டு விட்டோம், ஒருகோயிலில் திருவிழாவெனில் பிற ஆடல் பாடல்களோடு மாத்திரம் அமையாமல் தேவாரக் கோஷ்டி, திருப்புகழ்க் கோஷ்டி முதலியனவும் அவசியம் இடம் பெற்றிருக்க வேண்டும்; அக் கோஷ்டியினர் பெருமானுடைய புகழைப் பாடுவதுடன் இடையிடையே அப் பாடல்களின் பெருமையையும் நம் சமய உண்மைகளின் சிறப்பையும் மக்களுக்கு எடுத்து விளக்கிக் கொண்டே வர வேண்டும்.

திருச்செந்தூரில் முருகப் பெருமானுடைய புகழ் பாடும் திருப்புகழ்க் கோஷ்டிகள் பல உள. அவைகளில் ஒன்று அம்பாசமுத்திரத்திற்கு ஒரு திருவிழாவுக்கு அழைக்கப் பட்டிருந்தது. ஒரு பெரியவர் பாட்டின் கருத்தை இனிமை ததும்ப எடுத்துக் கூறி, பாடவும் தொடங்கும் போது உண்மையாகவே இன்பம் ததும்பினது, அம்முறை மக்களை மிகவும் ஈர்த்தது. ஆகவே அக் கோஷ்டியுடன் பெருந்திரள் சென்றதை யான் நேரில் கண்டறிந்தேன். இது சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும், இப்போதும் இத்தகைய கோஷ்டிகள் நிறைய வேண்டும். தேவத்தானங்கள் இத்தகைய கோஷ்டிகளுக்கு

முதலிடம் கொடுக்க வேண்டும். தேவாரம் திருநாவுடையார் வேலூர் அப்பாத்துரை யாச்சாரியார் கோஷ்டி, திருநெல்வேலி சுந்தர ஓதுவார் மூர்த்திகள் கோஷ்டி ஆகியவை அண்மைக் காலத்துச் சிறந்து விளங்கி மறைந்தன. தற்போதும் அத்தகைய கோஷ்டிகள் பல்குவனவாக. இதனால் சமயப் பிரசாரம் மேலோங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேலும் சமயப் பிரசாரகர்களுக்கு ஒரு தனிப் பயிற்சி கொடுக்கப் போவதாகத் தெரிந்து மகிழ்கின்றோம். பிரசாரகர்களைத் தேர்ந்தெடுப்பதில் பரிந்துரை, வேண்டுதல் வேண்டாமை முதலியவைகளுக்கு இடம் கொடுக்காது சமயஅறிவு மேம்பாடு, எடுத்துக் கொண்ட பொருளைப் பிறர்க்குத் தெளிவாய் எடுத்துரைக்கும் ஆற்றல்,வயிற்றுப் பிழைப்பு எனக்கருதாது தொண்டுக்கு ஊதியமும் அளிக்கப்படுகிறதே எனக் கருதி மகிழும் நிலை முதலிய நற்குணங்கள் அமையப் பெற்றவர்க்கே முதலிடம் கொடுக்க வேண்டும். அப்படியானால் தான் மேற் கொண்ட செயல் வெற்றி பெற ஏதுவாகும்.

“முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமன்றோ” ஆகவே பிரசாரகர்களுக்குத் தக்க ஊதியம் கொடுத்து அவர்கள் வேலை நிரந்தரமாக்கப் பெற்று அன்றன்றைய கூலி யென்றில்லாது, பிற துறையில் பணியாற்று வோருக்கு நாம்சிறிதும் எவ்வகையிலும் பின்னிட்டவரல்லோம்' என்று நினைக்கத் தக்க நல்ல சூழ் நிலையை உருவாக்க வேண்டும். எப்பணியும் மேம்பாடாகக் கருதுவது அவரவர்கள் பெறும் ஊதிய அளவையும் பொறுத்துள்ளது என்ற உண்மையையும் மறந்து விடக்கூடாது.

தற்போதைய முயற்சி போன்றே முன்னர் பல முறைகளிலும் பல மாவட்டங்களில் சமயப் பிரசாரகர்கள் நியமிக்கப் பெற்றார்கள். அவர்கள் பட்டநிலை பற்றி யான் நன்கு அறிவேன். பல கோயில்கள் அவர்களை நன்கு பயன்படுத்தாது அலட்சியக்கண் கொண்டு நோக்கின. அவ்வாறின்றியிருக்கக் கோயில் அலுவலர் நிறைந்த சமயப்

பற்றுள்ளவராக இருக்க வேண்டும். இலங்கையில் நம் சமாஜம் நடத்தும் சைவப் புலவர் தேர்வில் வெற்றி பெற்றவரே கோயில் அலுவலராக வரத் தகுதி பெற்றவர் என்ற சட்டமுண்டு. பல்கலைக் கழகத்தாரோ அல்லது அரசியலாரோ நம் சமய அறிவைச் சோதித்து நற்சான்று வழங்க வேண்டும். அவ்வாறு வழங்க முனைவது வரை, வயிர விழாக் கொண்டாடிய நம் சமாஜம் போன்ற தாபனங்கள் நடத்தும் தேர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து அதில் வெற்றி பெற்றவரை அலுவலராக அமர்த்தின் சமயப்பிரசாரச் செயலுக்கு அவ்வலுவலர்களின் துணை மிகச் சார்பாய் இருக்குமென்பது கூறவும் வேண்டுமோ?

தக்ககாலத்து இக்கருத்துக்களும் பயன் படும் என்று கருதியே ஈண்டெழுதப் பட்டன. இந்து சமயத் துறையினர் மேற்கொண்ட இம் முயற்சியை மிகவும் பாராட்டுகின்றோம். அது நன்றாகப் பயன் பட்டு, மக்கள் நம் சமய உண்மைகளைத் தெரிந்து சமய சீலர்களாய் விளங்கித் திகழ, எல்லாம் வல்ல இறைவனும் இன்னருள் பாலிப்பானாக.

---

உ

சிவமயம்

# எட்டாந் திருமுறை யாது?

(“சித்தாந்த வித்தகர்” கயப்பாக்கம் திரு. சோம சுந்தரம் செட்டியார் அவர்கள், சென்னை–29)

நம் செந்தமிழ் நாடு முழுவதிலுமுள்ள திருக்கோயில்களிலும், சபைகளிலும், சங்கங்களிலும் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் பன்னிரு திருமுறை விழாக்களைத் தமிழர்கள், சிறப்பாகச் சைவர்கள் அறிவார்கள். இவ்விழாவிற்கு அங்கமாகச் சில இடங்களில் பன்னிரு திருமுறைகளின் விளக்கங்களையும் மக்கள் நன்கு அறிந்து அவற்றையே நாளும் ஓதி நலம் பெறவேண்டுமென்று எண்ணிப் பல அறிஞர்களும் திருமுறைப் பெருமைப் பற்றிப் பேசி வருவதும் கண்கூடு.

இத்தனை காலமாக இவ்வளவு இடங்களில் எத்தனை யோ சைவ மெய்யன்பர்கள் பன்னிருதிருமுறைகள் யாவை? அவற்றின் ஆசிரியர் யாவர்? அவற்றை நாம் ஓதினால் என்ன பலன் இம்மையிலும் கிடைக்கும்? என்பது பற்றிப் பேசிக் கொண்டு வந்திருந்தும், இன்னும் எத்தனை யோ அன்பர்கள் இதனைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார் களே என்று எண்ணி வருந்த வேண்டியிருக்கிறது! இனி யாகிலும் சைவர்கள் சைவத் தெய்வப் பன்னிரு திருமுறை கள் யாவை? அவற்றின் ஆசிரியர்கள் யாவர்? அவற்றை ஓதினால் என்ன பயன் இம்மையில் கிடைக்கும் என்பதனை உணர்ந்து, தம் வாழ்நாட்களில் ஒரு முறையாகிலும் சுமார் 18,300 செய்யுட்கள் கொண்ட பன்னிரு திருமுறைகளைப் பக்தி சிரத்தையுடன் படனம் செய்து உய்வார்களாக!

இத்தகைய விழாக்கள் ஒன்றில் கலந்து கொண்டு எட்டாந் திருமுறை பற்றிப் பேசும் வாய்ப்பு ஒன்றினைப் பெற்றேன். அன்று அங்கு நிகழ்ந்ததை யின்று இங்கு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முதலில் பன்னிரு முறைகளின் வரலாறுகளையும் அவற்றின் பெரு மை பற்றியும் பேசி விளக்கினேன். உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருமுறை கண்டபுராணத்தில் 25 முதல் 28 வரையுள்ள செய்யுள்களை வாசித்துப் பொருள் சொன் னேன்· அங்ஙனம் விளக்கும் போது மணிவாசகப் பெரு மான் அருளிச் செய்த இரு பிரபந்தங்கள் திருவாசகமும் திருக்கோவையாரும் ஆம் என்றும் இவையிரண்டும் சேர்ந்து எட்டாந் திருமுறையாக மிளிர்கிறது என்றும் சொன்னேன். உடனே ஒரு நண்பர் எழுந்து எட்டாந்திரு முறை என்பது திருவாசகத்தையே குறிக்கும். மணிவாச கர் திருக்கோவையாரைப் பாடவில்லை என்றும், இதற்குத் திருமுறை கண்ட புராணத்தில் ஆதாரமுள்ளது என்றும் தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது: உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருமுறை கண்ட புராணத்தின் 26ஆம் பாட்டில் "அருள் திருவாசக மொன்று" என்று தானே கூறியுள்ளார்கள்? இன்னும் அவர்களே அருளிச் செய்த "திருத் தொண்டர் புராண வரலாற்றின்" 96ஆம் பாட்டில் "திருவாதவூரர் முறை ஒன்று" என்று அருளி

புள்ளார்களே! ஆதலால் திருக்கோவையார் எட்டாந் திருமுறை ஆகாது என்றார். இதற்கு விடையாகப் பின் வருவருமாறு நான் மேலும் விளக்கிப் பேசினேன். கடவுள் மாமுனிவர் அருளிச் செய்த திருவாதவூரர் புராணத்துள் மணிவாசகர் பாடி வந்த திருவாசகப் பாடல்களை எல்லாம் தன் திருக்கரத்தால் நடராஜப் பெருமான் எழுதிக் கொண்டான் என்றும் அவற்றுள் 20 பாடல்கள் கொண்ட திருவெம்பாவை ஒரு பிரபந்தமெனினும், இதனைப் பெரிதும் விரும்பிய நடராஜப் பெருமானும் மணிவாசகரை நோக்கி பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என்று கூறியதாகவும், அதன் படியே 400 பாடல்கள் கொண்ட "திருச்சிற்றம்பலக் கோவையாரை"ப் பாடினார் என்பதாகவும் சொல்லப் பட்டிருக்கின்ற படியால் திருக் கோவையாரும் எட்டாந் திருமுறையில் சேர்ந்தது என்றேன். மேலும் சைவ எல்லப்ப நாவலர் பாடிய புராணம் ஒன்றில் மணிவாசகரைக் குறித்துப் பாடிய துதிப் பாடல் ஒன்றில் "தேனூறும் வாசகங்கள் அறுநூறும், திருக் கோவை நானூறும்" என்றும் சொல்லி யிருப்பதால் திருக்கோவையார் எட்டாந் திருமுறையில் சேர்ந்தது என்றேன்,

அதற்கு அந்த நண்பர் இவற்றை யெல்லாம் நாம் எப்படிப் பலத்த பிரமாணமாகக் கொள்ளக் கூடும் என்றார். நானும் பிரமாணமாகத் திருமுறைகளுக்குள்ளேயே சான்று காட்டினால் போதுமா என்றேன். சரி என்று அவரும் ஒப்புக் கொண்டு சான்று காட்டுமாறு கேட்டுக் கொண்டார். நானும் பதினோராந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த "கோயிற் திருப் பண்ணியர் திருவிருத்தம்" என்னும் பிரபந்தத்தில் 58ஆவது செய்யுளாக அமைந்துள்ள செய்யுளைச் சொல்லி ஒப்புக் கொள்ளச் செய்தேன்.

அது வருமாறு :

"வருவாச கத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லை-
மன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலம்
பொருளாதி தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே"

இது மறைக்கு மேற்கோள் மறையே என்ற பிரமாணப் படி இச்செய்யுளே சாலும் என்று அவர் ஒப்புக்கொண்டு போய் விட்டார். நிற்க,

அண்மையில் திரு மயிலைக் கபாலீச்சரத்தில் 21.8.66 அன்று நடைபெற்ற திருமுறை விழாவிற்கு அங்கமாக அன்று மாலை என் மதிப்பிற்குரியவரும், தருமை ஆதீனப் புலவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில் அலுவலராயிருந்து ஓய்வு பெற்றுள்ளவரும் கல்வி, கேள்வி, அடக்கம் ஒழுக்கம் முதலியவற்றில் சிறந்து விளங்குபவருமான உயர்திரு சுந்தரேச வாண்டையார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் தாம் கூறியதில் நமக்கு முக்கியமாக வேண்டிய விஷயத்தைப் பற்றியும் அழுத்திப் பேசினார்கள். அதாவது;

"சேலம் ஜில்லாவில் தொகூர் என்ற ஊரிலுள்ள ஒரு ஆலயத்தில் மணிவாசகப் பெருமான் திருவுருவத்தின் இடது கரத்திலுள்ள சுவடியொன்றில் "திருவளர் தாமரை" எனத் தொடங்கும் திருக்கோவையார் முதல் பாட்டு பூராவும் மிகமிகச் சிறிய எழுத்துக்களால் பொறிக்கப் பட்டுள்ளது என்றும் அதனைப் பூதக் கண்ணாடி துணைகொண்டு தான் படிக்க இயலுமென்றும் தான் வேறு ஒரு நண்பர் சொல்லக் கேட்டதாகவும் விளக்கினார்கள். உடனே இவருக்கு இந்த விஷயத்தைச் சொன்ன அந்தணர் ஒருவரும் அங்கு வந்திருந்தவர் கூட்டத்தில் இவ்வுண்மையைத் தான் நேரில் கண்டதாகவும் ஆதரித்துப் பேசினார். எனவே, மணிவாசகப் பெருமான் அருளிய பிரபந்தங்கள் இரண்டு என்றும், ஒன்று திருவாசகம், மற்றொன்று திருக்கோவையார் என்றும் இவை இரண்டும் சேர்ந்து எட்டாந் திருமுறையாகும் என்பதும் தெளிவாக வில்லையா? என்று சொல்லி முடிக்கின்றேன்.

வாழ்க வாண்டையார் அவர்கள்! வளர்க அவர்கள் தொண்டுகள்!! வெல்க அவர்தம் நன் முயற்சிகள்!! வாழ்க சீரடியாரெல்லாம்!!

# வேட்டுவ வரி கூறும் தமிழர் வழிபாடு

(வித்துவான் பெ. கோவிந்தன்)

வேட்டுவவரி சிலப்பதிகாரத்திலுள்ள ஒரு பகுதி. இப்பகுதி தமிழருள் பாலை நிலத்தில் வாழ்ந்த வேடர்கள், அந்நிலத்துத் தெய்வமாகிய கொற்றவையை வழிபட்ட செய்தியையும், கோவலனும் அவன் மனைவி கண்ணகியும் காவிரிப்பூம் பட்டினத்தினீங்கிக், காடு கடந்து, பாலையை அடைந்து கதிரவன் வெம்மைக் காற்றாது சென்றவழியில், வேடுவர்கள் எடுத்த விழாவில் கலந்து நின்ற பொழுது, தெய்வம் உற்றாடியசாலினி கண்ணகியை நோக்கி

"இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி"

என்று கூறிய செய்தியையும் கூறுகிறது. வேடர்கள் கொற்றவையை வழிபட்ட செய்தியைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

வேடர்கள் தாங்கள் வாழும் பாலைநிலத்தில் தங்களுக்கு வேண்டும் உணவுகள் போதுமானபடி கிடையாமையினால், அவர்கள் பகைவர்கள் ஊரைக் கொள்ளைகொண்டும் ஆறலைத்தும் பொருள்களைப் பெற்று உண்டு வாழ்ந்தனர். அவர்கள் தமிழர் கடவுளாகிய சிவன், கொற்றவை, முருகன் என்ற மூவருள் கொற்றவையை வழிபட்டனர். கடவுளர்களுக்குக் கோவிலெடுத்து, உருவங்கள் அமைத்து, நாள் வழிபாடு செய்தலும் ஆண்டுதோறும் விழா வழிபாடு செய்தலும் தமிழர்கள் வழிபட்ட கடவுள வழிபாட்டு முறைகளாம்.

"நாக நாறு நரந்தை நிரந்தன
"ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும்
சேவும் மாவும் செறிந்தன கண்ணுதல்
பாகம் ஆளுடை யாள்பலி முன்றிலே"

என்ற பாட்டும் அதனைத் தொடர்ந்துள்ள இரண்டு பாட்டுக் களும் கொற்றவைக்குக் கோவில் இருந்த செய்தியைத் தெரிவிக்கின்றன.

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்"

"வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசையே நின்றாயால்"

"சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்"

என்ற பாட்டுக்கள் கொற்றவையின் திருவுருவத்தைத் தெரி விக்கின்றன.

கொற்றவைக்குச் சாலினி (பெண்பூசாரி) நாள் வழி பாடும் விழா வழிபாடும் செய்தனள். அவள் தெய்வம் உற்றாடிக்,

"கலையமர் செல்வி கடனுணின் அல்லது
சிலையமர் வென்றி கொடுப்போள் அல்லள்"

என்று வேட்டுவர்களிடம் கூறி, அவர்களைக் கொற்றவைக்கு விழா எடுக்குமாறு ஏவினாள்.

வேடர்கள் கொற்றவைக்கு விழா எடுத்தனர். பாவை, கிளி, தூவி, கானக்கோழி, மயில், பந்து, கழங்கு முதலிய பொருள்களைக் கொற்றவைக்குக் காணிக்கை கொடுத்தனர். வண்ணமும் சுண்ணமும் சந்தனமும் அவரை துவரை முதலி யனவும் எட்கசிவும், நிணச்சோறும் மகளிர் ஏந்தினர்.

ஆறெறிபறையும் சூறைப்பறையும் ஊது சின்னமும் கோடும் குழலும் மணியும் ஒலித்தன.

"வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரிஅரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்"

என்று வேடர்கள் கொற்றவையைப் புகழ்ந்து பாடினர்.

"அழகிய முடியையுடைய அமரர் தம் அரசனோடு வந்து பணிதலைச் செய்யும் நீலமணி போலும் உருவினையுடையாய்," நின் மலரடியைத் தொழுதோம். நிரைத்திரளைப் பெறும் விறலையுடைய எயினர்கள் பகையை அடுதற்குக் காரணமான விலையாக இடுங்கடனாகிய நிணத்தோடு கலந்து உகாநின்ற குருதிப்பலியாகிய இதனைக் கொள்ளுவாயாக" என்னும் பொருளுடைய,

"அணிமுடி அமரர்தம் அரசொடு பணிதரு
மணியுரு வினைநின மலரடி தொழுதேம்
கணநிரை பெறும்விறல் எயினிடு கடனிது
நிணனுகு குருதிகொள் நிகரடு விலையே"

என்றும்பிறவாறும் வேடர்கள் கொற்றவைக்குப் பலிக்கடன் கொடுத்துப் பரவுகின்றனர்.

வேடர்கள் தங்கள் பகையரசனுடைய ஆனிரையைக் கொள்ளைகொண்டு வருவதற்கு எண்ணுவர். கொற்றவையை அடைந்து தங்கள் எண்ணத்தைச் சொல்லி வணங்கி வேண்டுவர். அவர்களுடைய வேண்டுகோளுக்குக் கொற்றவை உடன்படுகின்றாள். அவள் அவர்களோடு பகைமன்னருடைய ஆனிரையைக் கொள்ளை கொள்ளக் கை வில்லேந்தி முன்னே செல்லுகிறாள்.

"உட்குடைச் சீறூர் ஒரு மகன்ஆன்
நிரைகொள்ள உற்ற காலே
வெட்சி மலர்புனைய வெள்வா
ளுழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர்புனைய வெள்வா
ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்க்
கட்சியுள் காரி கடிய
குரலிசைத்துக் காட்டும் போலும்"

வேடர்கள் பகை மன்னர்களுடைய ஆனிரைகளையும் பொருள்களையும் கொள்ளை கொண்டு மீண்டுவந்து தாமே உண்டனரல்லர். தம் போருக்கு வில், அம்பு, வாள், வேல் முதலியன செய்து கொடுத்த கொல்லர்களுக்கும் தம்மோடு துடிகொட்டி வந்த துடிகொட்டிகளுக்கும் பாட்டுப்பாடிப் புகழ்ந்த பாணர்களுக்கும் கள்விலையாட்டிக்கும் நிமித்தம் கூறினார்க்கும் கொடுத்துத் தாமும் உண்டனர்.

இன்னணமாகச் சிலப்பதிகார காலத்திலேயே நம்முன்னோர் மேற்கொண்ட வழிபாட்டு நிலைபற்றிப் பார்க்கக் காணலாம். அதனை ஆய்ந்து தெளிக.

---

# அடியார் பெருமை.

சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞான சம்பந்தன்.

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே பெறுதற்கரிய, ஆனாலுமரிய வொன்று, பிறவியெடுத்தலா லெத்தனையோ, வின்னல் கட்குள்ளாவதாக வெண்ணி மக்கள் பெற்ற பிறவியை நொந்து மாய்கின்றனர். அடியவர்களெல்லா மெடுத்த மானிடப் பிறவி பெரிதென்றெண்ணி மகிழ்வர். ஆனால் மீண்டும் தாய் வயிற்றில் தோன்றும் பிறவி வேண்டேமென்பர். மானிடவுடலை யடியார்கள், புன்புலா லாக்கை யென்றும் மலப்புழுக் குரம்பை யென்றும், அழுக்குடன் நாறுமுடலென்றும் பலவாறு இகழ்ந்து கூறுகின்றதையவர்கள் பாக்கள் வாயிலாக நன்குணரலாம்.

அவர்கள் கூறுவதில் நியாயம் பெற்றுள்ளதா வெனக் காணின், முற்றிலு முறுதி யென்ற வுண்மைக்கு வொவ்வொருவரும் வருவர். காலை யெழுந்து சௌசம் செய்து, நீராடாவிடின், உடலில் மணம் கமழுமோ? "புறத்தூய்மை நீரானமையும்" என்பது தெய்வத் திருவள்ளுவர் வாய்மொழி. புறத்தூய்மை செய்து கொண்டாலும், அதனுலகத் தூய்மை தோன்றுமோ? அகம் தூய்மையாவதற்கு வாய்மை வேண்டும். வாய்மை யெதுவென வாராயின், பல்காலும் பற்றற்று நிற்கும் பரமனின் பரநிலை பற்றிப் பாடலும், பேசலுமேயாகும். இங்ஙனம், அவன்பாலன்பு நிலை கொள்ளாது நிற்பின், பெறப் படுவது இன்னலு மயக்குமேயாகும். அதனாற்றான், வாய்மை யெனப் படுவது யாது? யெனக் கேட்கப்புகுவார்க்குத் திருவள்ளுவரும் "வாய்மை யெனப் படுவது யாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல்" என்று நவின்றுள்ளார். அத்தீமையில்லாத நிலையை வொருவர் நாடி வாழ வேண்டுமெனின், அதற்குரிய வாய்மை நிறைந்த வடியார்கள் பெருமையையும், அவ்வடியார்கள் வேண்டுங் காலத்து, வேண்டியவர்க்குத் துணை நின்று வேண்டியவற்றை யீயும் நிலை படைத்த வருள் வாய்ந்த அங்கயற் கண்ணி யெம்மானின் பெருமையையுமே உளங்கொள வேண்டும்.

வாழ்க்கையை வாழ வறிந்த அடியார்கள்தாம் வாழ்க்கை பயனற்றதென்பர். வாழத் தெரியாத மக்கள் வாழக்கையைப் புகழ்வ தளவு கடந்தது. புறவுலகை வாழ்க்கை யெல்லா வற்றுனும் மேம்பட்ட தென்றெண்ணி யெழில் மிக வேற்றம் பாடும் மக்கட்கு வாழ்க்கை யமைவதேயில்லை. இவர்களுக்குத்தானிலக்கிய வாய்வு, திறன், இன்பம், இவற்றின்பா லீடுபாடு அதிகம். வெற்றெழிலே மனத்திற்கு மகிழ்வூட்டும் பெற்றிமை வாய்ந்ததென்றெண்ணும், இலக்கிய நலச் செல்வர்களுக்கு அக வாழ்க்கையின் சிறப்பு வீதாமென் றுணரும் எண்ண மெக்காலத் தரும்புமோ? புறவுலக வாழ்க்கையில், புறக் கண்களுக்குத் தோன்றும் அழகுடைய பொருட்களெல்லாம் கொள்ளத் தகுவனவல்ல! எவை அழகுற மனத்தைக் கவர்கின்றனவோ,

அவையெல்லாம் ஆசைப்படு மொருவரை வாழ்வைப்பன வல்ல! பக்குவப்படா மனம் கண்ணிற் காணும் காட்சிப் பொருட்களின்பாலெல்லாம், நாட்டத்தைச் செலுத்தும். இம்மனம் கொண்டவர்களே மாநிலத்தில் வாழும் பக்குவப் படா ஆன்மாக்கள்.

இஞ்ஞாலத்தில் பக்குவப்பட்ட ஆன்மாக்கள் அடியார்கள். பக்குவப்பட்டவர்கள் புறவுலகத்தில் வாழினும், அவற்றின்பால் சிந்தை வையாமல், அகப் பற்றின்பத்தின் மேலதாய்த் தங்கள் நாட்டத்தை யிருத்துவர். என்றும், ஞாலம் கொடியதன்று; வாழ்க்கையும் கொடியதன்று; நல்வாழ்வு – அஃதாவது சமய வாழ்வு வாழத் தெரிந்தார்க்கு, ஞாலமும், வாழ்க்கையும் நன்மை செய்யுந் தகைமையன. அடியவர்கள் உலகத்திற் றோன்றிக் கவரும் பொருட்களை யெல்லாம், தங்கட்குரியன வெனக் கொள்ளாம லெல்லாம், அவன் படைப்பிற் றோன்றியவை யென்றும், அவன துரிமையுடைய சொத்துக் களென்றும், அவனேற்று மகிழ்தற்குரியவை யென்றும் நினைப்பர். மக்களாய்த் தோன்றுவோ ரனைவருக்கும், எல்லாப் பொருட்களின்பாலும் ஆசை யதிகம். அவ்வாசையான், எல்லாப் பொருட்கள் மூலமும் தோன்றும் நலங்களைத் துய்க்க வேண்டு மென்கின்ற பேரெண்ணம் முகிழ்கின்றது. ஆசைப்படும் பொருட்களாற் றோன்றும் நலங்கள் எவ்வளவு பிறக்குமோ, அங்ஙனமே, அவைகளான் தோன்றும் தீமைகளும் எண்ணிலு மேட்டிலுமடங்கா என்ற சிந்தனை உடனடியாக வளர வேண்டும். இச் சிந்தனை யுதிப்பது முயற் கொம்பு. அடியார்களோ நன்மையையும், பின்னர்த் தோன்றும் தீமையையும் அறியும் சக்தி யுடையவர்கள்.

குக்குடம் கூவும் வேளையிற் றவங்கலைந்து, கோவணத்துடன் காட்டு வெளியிற் சென்றுலவும், தவயோகியர்கட்கு இவ்வுலகத்தாற் றோன்றும் நன்மை தீமைகள் இல்லாமற் போகின்றன. அவர்களெல்லாம் காட்டிடை வாழ்வதாற்றான், நாட்டிடை நன்மை கொழித்தோங்குகின்றது;

இவர்களும் வேதப் பொருளான அங்கயற் கண்ணி யண்ணலின் அடியவர்கள்—தவயோகிகள். இவர்கள் தவ நிலை சிறற்றுப் போகினும், நாடு காடாகும் என்பதுண்மை எக்காலும், அவனைப் பற்றியே யெண்ணும் சிந்தனையில் வாழ்பவர்களுக்கு, புறவுலகப் பொருட்களின்பால் பற் றற்றுப் போகின்றது. அதனால் அவர்கள் பெறும் பலன் பன்மடங்கு வுயர்ந்துவிடுகின்றது. எல்லாவற்றிற்கு மூலகில் கட்டுப்பாடு வுண்டென்கின்ற வெண்ணமாகிலும், தோன்றியுள்ள விக்காலத்தில், ஆசைக்குக் கட்டுப்பாடு வுண்டென்கின்ற வெண்ணம் தோன்றுகின்றிலது. மின் சாரம் கம்பியினுள் பாய்ந்து வரினும், அதுதாங்கு மளவிற்குக் குறைத்தனுப்பினாற்றான் மின் விளக்குகள் நன்கு ஒளியைக் கால்கின்றன. வரம்பு மீறுமேயானால் விளக்கெரியாது! வீடு பற்றிக் கொள்ளும்,

திருமூலர், தாயுமானுர், பட்டினத்தார் போன்ற சிவ ஞானச் செல்வர்கள் தாயின் மணி வயிற்றிற் றோன்றிய வர்கள் என்பது யாவரு மறிந்ததோ ருண்மை. மேற் கண்ட சமய ஞானச் செல்வர்க ளெல்லோரும், சைவ சித்தாந்த நெறி நின்ற வேதாந்தச் செல்வர்களே! தவச் செல்வர் களெல்லாரும், உலகில் வாழ்வோர்க்கு, எப்பொ ருளும் வேண்டாம் என்று கூறுமளவிற் சென்றவர் களல்லர். அவர்கள் உலகியற் பொருட்களின்பால், அளவு பட்ட ஆசையைக் கொள்ள வேண்டும் என்ற அறி வுரையையே புகன்றனர்.

அடியார்கள் வாழ்க்கை யென்றும் விருப்பு, வெறுப்பு அற்றதாகும். மக்கள் வாழ்க்கை நலனுறும் பொருட்டுத், தவச் செல்வர்கள், தங்களின் தீந்தவத்தை யென்றுமியற்றி வருகின்றனர். பல்காலம் யோக நித்திரையிலாழ்ந்து, பேராநந்தப் பெருங் கடலிற்றங்களை மூழ்க வைத்துக் கொண்டிருக்கும் சித்தர் பெருமக்களும் அவனுடைய அடியவர்களே! என்று உலகில் உயிர் என்றுவொன்று தோன்றிற்றோ, அன்றே உணர்வு என்றவொன்று கால் கொள்ளலாயிற்று. உணர்வு தோன்றியவுடனே இறை

யுண்மை, இயற்கையின் நன்மைகளெல்லாம் புரியலா யிற்று. இவ் விறையுண்மை அறிய முடிந்த காலை, அவனருட்பேற்றிற்கு உரியரான அடியார்களும் தோன்றி னர். இவ்வடியவர்கள்தாம், தங்களின் பெருஞ்சிந்தனை யிற் றோன்றிய ஆன்மீகக் கருத்துக்களை யெல்லாம் வடித் தெடுத்து நாளும் நாநில மக்கட்கு அறிவு கொளுத்தும் தொண்டிலீடுபடுவாராயினர்.

தன்னிலை மறந்து, தனியிருக்கை கொண்டு, முப்பொழு தும் காட்டில் உள்ள நறுமணங்களை யனுபவித்து அவன் சீர்த்தியை யுன்னி நாட்டத்தைச் செலுத்தி, வாழும் சித்தர் பெருமக்களும் சிவத்தின் அடியவர்களே! இவர்களே சிந்தனைச் செல்வர்கள்! அடியவர்களி லொரு சாரார் அவனுக்குத் தொண்டு நிகழ்த்துவர்; இன்னொரு சாரார் அவனுக்குப் பூசை நிகழ்த்துவர்; மற்றொரு சாரார் அவனைப் பற்றிச் சிந்தனையிலீடுபடுவர்; இவ்வாறு அடிய வர்கள் நிலைகள் பற்பல வகையான் பிரிகின்றன வென்ப தறியற்பாற்று.

தமிழ்நாட்டில் இன்னொரு சாரார் அத்வைதம்-அல்லது வேதாந்த நெறி நிற்கும் அடியவர்கள். இவர்கள் ஏகான்மவாதக் கொள்கையைக் கொண்டவர்கள். இவர்கள் பரப்பிரும்ம சொரூபத்தை (விதேக முத்தி.) யடைவதாக ஐதீகம். இவர்கள் சிவமாம் தன்மையை யுணர்ந்து, சிவத்தின் தன்மையில் மாறும் இலக்கு பெறும் அடியார்கள். இவர்கள் திருவடிமுதலாம் இன்பப் பேற்றில் பற்றுக் கொண்டு திளைக்கினும், முடிவில் பெறும் முற்றுற்ற வாற்றலின்பம் சிவத்தன்மை யுறுதலேயாகும். கதிரவன் காலை யெழுந்து, நல்ல கதிரொளி வீசுங் காலத்து, அவன் கண்ணிற்படுமாறு சில குடங்களில் நீர் நிறைத்து வைத்தால், அந்நீர்க் குடங்களிலவனவனின் பிம் பங்கள் விழுவதாங்கு, சிவத்தின் தன்மை யுணர்ந்தாய்ந்து, அவன் பேரருட் கருணையிற்றிளைத்து, அவன் சாயலைப் பெறும் நெறியே வேதாந்தத் திருநெறியாகும் எனத் தமிழ் மாநிலத்தில் அழைக்கப் பெறுகிறது. இவர்களே சீரிய

நோக்கு பூண்ட தமிழ் ஞானச் செம்மல்கள். இவர்கள் பற்றி நிற்பதும் அடியார் திருக்கோலமேயாகும்.

தமிழ்நாட்டின் இன்னொரு அடியார் நிலை சீவன் முத்தர் நிலையைச் சார்ந்ததாகும். பலகாலம் அங்கயற் கண்ணி யெம்மானின் தண்ணருட் கருணைக்குப் பாத்திரர் களாகி அவனை யெண்ணி, அவன் திருப்புகழ்பாடி, அவன் திருவடிக் கோலத்தி லாழ்ந்த வெண்ணம் படைத்து, உட லோடு மறையுங் காட்சிநிலை என்பதாகும். இந்நிலையே சீவன்முத்தர்நிலையாகும். இவர்கள் பிறக்குங்கால், வளருங் கால், வாழுங்கால், அவன் அருள் நாட்டத்தில் இருக்குங் கால், தோன்றிய வுடலுடனிருந்து அவ்வுடலுடனே, அவ னோடு ஐக்கியப் படுகின்றன ரென்பது ஞான நூல்களின் கருத்து. இவர்கள் பஞ்சபூதச் சேர்க்கையிலேயே தோன் றியவர்களதனால், அப்பஞ்சபூதத்தையும், அவற்றிற்கே கண்ணுக்குத் தெரியாமல் மறையச் செய்கின்றனர் என்பது முத்தர் நூல்கள் கூறும் முடிவு. சான்ருக, மாணிக்கவாசகப் பெருமான், குகை நமசிவாய தேசிகர், இராமலிங்கவடிகளார் போன்றவர்களெய்திய நிலை சீவன் முத்த நிலையாகும்.

அடியார்கள் பரம்பரையில் விளங்குகின்றவர்களே தேவர்களும். தேவர்கள் எம்பெருமானையென்றும் வழுத் திய வண்ணமுள்ளனர். தேவர்கள் புவனியிற் போய்ப் பிறப்பதில்லை யென்கின்ற நிலை தவிர, அவர்களும் எல்லா வகையான மானிடவியல்பும் பெற்றவர்களே! நான்முகன், இந்திரன், முதலானவர்களும் தேவர்களினும் சற்றுயர்ந்த வர்கள் என்றே கருதப்படுகின்றனர். தேவர்கள் நாடொறும் பூக்கொய்து, சிவபெருமானை வந்தித்து, திருவடிகளை மலர்கொண்டு வழிபாடியற்றுகின்றனர். என்றும் உயிர் பெற்று வாழும் வாழ்க்கையைப் பெற் றுள்ள தேவ கூட்டத்தின் அடியார்கள் பெருமையும் நித்திய பூசைப் பெருமையில் அமைந்துள்ளதென்று சமய நூற்கள் வாயிலாக நுண்ணிதி னுணர்கின்ருேம்.

"தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடி மேலலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டமாடி
நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலை காணப் பெற்றாய்!
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே!"
—தேவா—திருநா—திருப்புகலூர்

என்பதை ஓர்ந்து தெளியலாம்.

இனி திருவாசகமென்னும் பத்தி நூலான் அடியார்களின் பெருமை எவ்வளவின தென்பதை யீண்டுக் கற்பாம்; தேவர் கூட்டங்களையும் இவண் அடியார் கூட்டமெனக் கொள்க! "திருவண்ணாமலைப் பெருமான் திருவடிக் கமலத்தைச் சென்றிறைஞ்சுகின்றார்கள் தேவர் கூட்டத்தடியார்கள். அங்ஙனம், பெருமானின் பாத கமலங்களை முடியணிந்துள்ள தேவர்கள் வணங்குங் காலத்து, தேவர்களின் மணிமுடி தண்ணொளியை யிழக்குமாறு போல, கண் போன்ற கதிரவன் தோன்ற, ஆகாயத்தை யளாவி நிற்கும் மேகக் கூட்டங்கள் மறையவும், குளிர்ச்சி பொருந்திய விண்மீன்கள் ஒளி மழுங்கித் தாம் அகலவும், பெண்ணாகி, ஆணாய், அலியாய், ஒளிபிறங்கு விண்ணிடைப் பொருளாகியும், 'மண்ணிடைப் பொருளாகியும் ஆகி, இத்தனையும் வேறாகி, அறிவு நிறைந்த வமுதமாய்; நின்றவனுடைய கழல்பாடி — அவன் திருவடிகளைப் பாடி — பெண்ணே யிந்தப் பூம்புனல் பாய்ந்து ஆடுவாய் பாவையன்னாய்!" எனத் திருவெம்பாவை யியம்புகிறது.

"அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்,
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே யிப்பூம்புனல் பாய்ந்தாடேலோ
ரெம்பாவாய்!"
—திருவா—திருவெம்—18—திருவண்

அடியார்களுக்கென வொரு தனிப்பெருமை யுளதாயின் அஃதாவதெம்பெருமானை யிடைவிடாது வழிபடுதலேயாகும். அடியார்கள் தங்களுக்கென வொரு தனிப் பெருமை தேடிக் கொள்வதில்லை. அவன் அருளை நாடி, அவனை வந்தித்து, வழிபாடு செய்யுங்கால், எல்லாப் பெருமையும் அடியார்களை நோக்கி யாடிப் பாடி வருகின்றன வென்பதறியத் தக்கது.

"பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார்
வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்,
தூமா மழைநின்றதிர வெருவித் தொறுவின்னிரை யோடு,
ஆமாம் பிணைவந்த ணையுஞ்சார லண்ணாமலையாரே!"

—திருஞா–தேவா–1 –திருவண்

என்று திருஞானசம்பந்தர் திருவண்ணாமலையின் உயர் வினைப் புகழ்ந்து பேசுகின்றார். வளப்பம் நிறைந்த அண்ணாமலையில், வறுமை நிலையறியாத அடியார்கள் என்றும் அவனை நோக்கி நிர்மலமாக வழிபாடியற்றினர் என்பது இத் தேவாரத்தின் உள் நிறைவு.

இனி அருணந்தி சிவாச்சாரியார் இயற்றியுள்ள சிவஞானசித்தியார் மூலம் அடியார் பெருமை எவ்வளவின தென்பதை யீண்டுணர்வாம்

'எம்பெருமானிடத்தில் அன்பில்லார், அடியவர்களுக்கும் அன்பில்லார்; எந்த உயிரிடத்திலும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லார்; அறிவில்லாப் பிணங்களைப் பற்றி இவண் என்ன பேசுவது; பிறப்பானலும், இறப்பானலும் பிணக்கங் கொள்வர்; அவர்களை விட்டுவிடுக; ஆசையோடும் சிவன் அடியை வந்திக்கும் அடியவர்களை அடைந்திட்டு, அவர் செயல் உன் செயலாகச் செய்து, பேசும் சொற்களை மரியாதை மாண்புடன் கூறி, அருள் ஞான நாட்டத்தில் நின்று கும்பிட்டுக் கைகொட்டிக் கூத்தாடித் திரியே'!

"ஈசனுக் கன்பில்லார் அடியவர்க்கன் பில்லார்,
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்,
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கிற்
பிறப்பினும், இறப்பினும், பிணங்கிடுவர் விடுநீ!
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்(டு)
அவர் கருமம் உன் கரும மாகச் செய்து,
கூசி மொழிந் தருள் ஞானக் குறியில் நின்று,
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே."

—சிவஞான-சித்தி-323.

அடியவர்களைக் கண்டு தொழலும், போற்றலும், வாழ்த்தலும், வந்தித்தலும், அரன் கழல் போற்றிப் பணிதற்குரிய நிலையினை யொக்கும். அடியார்களின் பெருமை கூறவந்த தமிழ் மூதாட்டியரான அவ்வையாரும் 'இறையோ தொண்டருளத் தொடுக்கம்" என்று கூறுமுகமாக விளக்கந் தருகின்றார். தனக்கென வாழாத வொரு வாழ்க்கை மேற் கொண்டவர்களே அடியவர்கள். இவர்கள் உலகியற் பொருட்களின்பால் பற்று நீங்கப் பெற்று பரமானந்தத் தேவனடிபாடி வாழும் ஒப்புயர்வற்ற வாழ்வு பெற்றவர்கள். இவர்கள் சாதிக்க வேண்டுமென் றெண்ணியது வெல்லாம் அவன் திருவடிக் கன்பு பூணலும், அதனருளால் கிடைக்க விருக்கும் அருளமுதமும், அவ்வமுதம் உண்டதால் பெறும் அவன் சாயலைப் பெறும் நிலையும் அன்றி வீட்டுப் பேறு எய்தும் நிலையுமேயாகும். அடியவர்களென்ற வெண்ணம் மனத் துதித்தால் பற்றற்றவர்கள்—துறவிகள்—அரனுக் கடிமை பூண்டவர்கள் என்பதை மனத்திருத்தல் நலம்.

# சூரிய பூசை

(தி. கி. நாராயணசாமி நாயுடு)

ஞாயிற்றை வேதம் வாழ்த்துகிறது. சோதிடக் கலை அவனைத் தலைமையாக வைத்துக் கூறுகிறது. சௌரசமயம், அவனை முழுமுதலாக வழிபடுகிறது. சூரிய சித்தாந்தம், அவனைத் தலைமையாகக் கொண்டு கணிக்கப்படுவது. சௌரமானம், என்பது அந்த அளவையின் பெயர். அவன் தோற்றமும், மறைவும் காவிய உறுப்புகள். அவனைப் பாடாத மொழி, புகழாத புலவர்கள், வணங்காத மக்கள் இல்லை. 'பலர் புகழ்ஞாயிறு' என்பது திருமுருகாற்றுப் படை வரி. 'ஞாயிறு போற்றுதும்' என்று சிலப்பதிகாரம் போற்றி செய்கிறது. சூரிய குலமே, இராமாயணத்தை அணிபெறச் செய்வது. வால்மீகி இராமாயணத்தில் 'ஆதித்திய இருதயம்' அவனைப் போற்றுகிறது. சிவன் கோயில்களில் முதலில் அவனை வழிபட்டே பகல்—பூசை தொடங்குகின்றது. சிவமூர்த்திகளுக்கு அவன் வலக்கண். அவன் விளங்கும் அட்ட மூர்த்தங்களில் ஒன்று, ஞாயிறு. சிவன் கோயில்களில் சூரியன், ஒன்பது கோள்களில் ஒருவனாகவும், தனிமையாகவும், ஆக இரு இடங்களிலும் அவன் அமைக்கப்பெற்றிருக்கின்றான். சிவன் கோயில்களின் அமைப்பில், சூழ்ந்த பரிவாரங்கள் மிகப் பிற்பட்ட காலத்தில் உள்ளே இடம் பெற்றன. பரிவாரங்களில் நவக்கிரகம் மிகப் பிற்பட்டது. இவை சில கோயில்களில் புறப்புறச் சுற்றில் இடம் பெற்றிருப்பதே இதன் நுழைவின் காலத்தை விளக்கும். சிவன் கோயில்களில் இவை சுமார்த்தப் பிராமணர்களால் சிறப்பாக வழிபடப்படுவது. பெருமாள் கோயில்களில் நவக்கிரகம்' கிடையாது. புறநடையாக ஆழ்வார் அருளிச், செயல்பெற்ற மதுரை—கூடல் அழகர் கோயிலில்கூட அண்மையில் இடம்பெற்றுவிட்டது. மெய்கண்ட சித்தாந்த சைவர்கள், சிவபெருமானை ஒப்ப, ஒன்பதுகோள்களை வழிபடுவது,

சித்தாந்தச் செந்நெறியை அறியாத நிலை ஆகும். இன்றும் திருக்கடவூர் முதலிய பல கோயில்களில் 'நவக்கிரகம்' கிடையாது. புள்ளிருக்கு வேளூர் உள்ளிட்ட பல கோயில்களில், இறைவன் முன், அவர்களின் ஆற்றல், வலிகுன்றி, அழிந்து நிற்கும் நிலையை உணர்த்த, பல கோணங்களில் உள்ள அவர்களை, ஒழுங்காக ஒருவரிசையில் அணிவகுத்து அமைத்திருப்பதைக் காணலாம்.

சிவ பூசையில் சூரிய பூசைக்கு முதலிடம் உண்டு; ஆனால் நவக்கிரக பூசை கிடையாது. தனிப்பட்ட 'சூரிய நமஸ்காரம்' என்பது ஒன்று உண்டு. சூரியனுக்குத் தனிப்பட்ட கோயில்களும் உண்டு. ஒரிசா மாநிலத் தலைநகர் புவனேச்சுரம் என்பது. அங்கிருந்து 41கல் கடந்துசென்றால் கடற்கரையில் 'கொணாரக்' என்ற ஊர் உள்ளது. இது பூரி செகந்நாதத்திற்கு 53 கல் தொலைவு ஆகும். அங்கு கி. பி. 1278–இல் கட்டிய தலைசிறந்த சூரியன் கோயில் கற்கோயிலாக இருப்பதைக் காணலாம். கூர்ஜர மாநிலத்தில் 'மேசேனா' மாவட்டத்தில் அகமதாபாத் நகருக்கு வடமேற்கில் 60 கல்லில் மொதீராவில் கி. பி. 1027–இல் ஏற்பட்ட கிழக்கு நோக்கிய சூரியனார் கோயில் உண்டு. இதன்மூலக் கோயிலில் இருந்த, சூரியன் சிலை இன்று இல்லை. காஷ்மீர நாட்டில் 'மார்ட்டண்டி'லும் (9ஆம் நூற்றாண்டு), மத்திய மாநிலத்தில் 'கஜுராகோ'விலும் (10–ஆம் நூற்றாண்டு) பரிதியாருக்குத் தனிக்கோயில்கள் உண்டு. 'பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்ததை இளங்கோ அடிகள் கூறுகிறார். ஆடுதுறையை அடுத்த சூரியனார்கோயில் முதற் குலோத்துங்கன்காலத்தில் ஏற்பட்டது.

ஞாயிற்றின் நேர்ஒளி குறிப்பிட்ட நாட்களில், மூல மூர்த்தியின்மேல் தோயும்படி தமிழ் நாட்டில் சில சிவன் கோயில்களைக் கட்டி இருக்கிறார்கள். இது கோயில் அமைப்பின் சிறப்பு. கிழக்கு நோக்கிய கோயில்களில் காலையிலும்,

மேற்கு நோக்கிய கோயில்களில் மாலையிலும், சூரியன் நேராக வரும் காலங்களில் ஞாயிற்றின் ஒளி, மூலவர் மேல் வீழ்வதை இன்றும் காணலாம். அப்படி வீழும் நாட்கள், அக்கோயிலில் 'சூரிய பூசை' நாட்கள், என்று சிறப்பிக்கப்பட்டு, அந்த வேளையில் சிறப்பான பூசனைகள் நிகழ்கின்றன. அந்நாட்கள் சௌரமான கணக்குப் படி ஏற்பட்ட தேதிகளை ஒட்டி நிகழ்கிறது. மிகச் சில இடங்களில் சாந்திரமான—பிறைநாட்களை ஒட்டியும் நிகழ்வதாகத் தெரிகிறது. விஞ்ஞான முறையில் சூரியன், ஒளிதரும் நட்சத்திர (Star) வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளான். அந்த அடிப்படையில் சூரியன் கிரக (Planet) மாகக் கருதப்படவில்லை. ஏனைய கோள்கள் ஒளி தருவன அல்ல. அவை சூரியனிடமிருந்து ஒளியைப் பெறுவன. ராகுவும், கேதுவும், சந்திரனும் பூமியும் செல்லும் வீதி வழிகள் சந்திக்கும் புள்ளி இடங்களே தவிர, ஏனைய கிரகங்களைப் போல் அண்டப் பருப்பொருள்கள் அல்ல. பூமியும் ஒரு கோளே. சந்திரன், கோளைச் சுற்றும் துணைக்கோள் (Satilite)

மேலே குறிப்பிட்ட கூர்ஜர மாநில மொதீராவில், இரவும் பகலும் சம கால நேரங்களாக வரும் மார்ச் 21, செப்டம்பர் 22 அல்லது 23-இல் (Springaud autumnal equinoxes) சூரியன் ஒளி நேரே மூலக்கோயிலில் விழுகின்றது. தமிழ்நாட்டில் அப்படி நிகழும் இடங்கள் மாத வாரியாக வருமாறு:

1. சித்திரை :

1, 2, 3 கூடலை ஆற்றூர்

1 முதல் 7 புறவார் பனங்காட்டூர்

5, 6, 7 ஆடுதுறை

7 முதல் 18 (12 நாள்) செம்பொன்பள்ளி

11, 12, 13 குடந்தைக் கீழ்க்கோட்டம்—நாகேசுரசாமி

2. புரட்டாசி :

7, 8, 9 பைஞ்ஞீலி
19, 20, 21 புள்ளிருக்கு வேளூர் (மாலை)
19, 20, 21 கடவூர் (மாலை)

3. ஐப்பசி :

9 முதல் 15 (7 நாள்) எத்தாப்பூர் சாம்பமூர்த்தி கோயில்
14 ஆம் தேய்பிறை நாள் முதல் 7 நாள் நெல்லிக்கா (மாலை)

4. மாசி :

1–7 (7 நாள்) எத்தாப்பூர் சாம்பமூர்த்தி கோயில்
13, 14, 15 கண்டியூர் (மாலை)
17 முதல் 21 (5 நாள்) குன்றத்தூர் சேக்கிழார்
18 முதல் 24 (7 நாள்) நெல்லிக்கா (மாலை)
19, 20, 21 புள்ளிருக்கு வேளூர் (மாலை)
21 முதல் 25 (5 நாள்) பூந்தமல்லி வைத்தியநாதர்
23, 24, 25 அழுந்தூர்

5. பங்குனி :

1 முதல் 7 மாயூரம்–வள்ளலார் கோயில் (மாலை)
7, 8, 9 பைஞ்ஞீலி
12, 13, 14 சித்தூர் மாவட்டம் நாகலாபுரம்
13 முதல் 22 (10 நாள்) தெளிச்சேரி (மாலை)
13, 14, 15 வேதிகுடி, திருத்தணி ஆறுமுகசாமி
23 முதல் 27 (5 நாள்) நாவலூர்
25 முதல் 29 (5 நாள்) பொன்னூர் (மாயூர வட்டம் பொன்னூர்

மேற்குறித்த தேதிகளில் சில வற்றிற்கு ஆதாரம் சிவத்தல மஞ்சரியும் பஞ்சாங்கங்களும் ஆம். இவைகளில் பல, நேரில் கண்டறிந்தவை. இன்னும் பல இருக்கக்கூடும். அவைகளை அறிமுகப்படுத்த கோயிலார் முயலவேண்டும். அன்பர்கள் தெரியப்படுத்தினால் சேர்த்து வெளியிடமுடியும். திருச்சிமாவட்டம் லால்குடி (தவத்துறை)யில் உண்டு. தேதி விடுபட்டுவிட்டது. கன்னட நாட்டு எல்லையில் காவிரி தென் கரையில் சுண்ணம்பாடிக்கு மேற்கே 19—வது கல்லில் உள்ள 'இடைத்துறை' அர்க்கேசுரத்தில் ரதசப்தமி அன்று தேர். அங்கு மகா சிவராத்திரி நாளில் காலே சூரியபூசை நிகழ்வதாகத் தெரிகிறது. இதுவரை தெரிந்த கோயில்கள் யாவும் சிவன் கோயில்களாகவே இருக்கின்றன. தஞ்சைமாவட்டம் பரிதி நியமம், அவன் பெயரால் அமைந்தது. சில கோயில்களை அவன் வழிபட்டதாகப் புராண வரலாறு. அவைகளில் பல இந்த சூரியபூசை நிகழும் கோயில்களாக இருக்கின்றன.

---

# திருமந்திரம் அரிய உரை

(அம்பை சங்கரனார்)

அரவ விழுந்த வரும் பெரு மத்திக்கா
யுரவப் பொதியு முபாய மறிகிலர்
உரவப் பொதியு முபாய முணர்வு
கற்றத ஞலனு போகங்கண் டாரே

(என்பது.) பரம்பரையாக நீங்கி வருகிற சுக்கிலம் நீங்காமல் உபாயம் குருவருளினு பாயப்படி. பரமானந்த சுகத்தைச் சித்திப்பதான தவத்திலே அறிவு சென்று கொளுவும்படி கற்றவர்கள் அல்லவோ நீங்காம லுள்ளே யாக்கு முபாய மறிந்தா ரென்னத் தக்க தென்றது.

அரவ விழுந்த வரும் பெரு மத்திக்காய் என்றது பரம்பரை தண்டின் கண்ணே வந்து யோனியிலே விழுவதுமாய் துல்லபமுமாய்ப் பின்பு சரீரமாகப் பரிணமிப்பதுமாயிருந்துள்ள வெலும்பிலே விளையப்பட்ட சுக்கிலம் என்றபடி.

உரவப் பொதியும் உபாயமறிகிலர் என்பது பிறப்பு போகாமல் உள்ளேயாம்படி பொதிகிற வழிபாடறிகிறார் களில்லை யென்றபடி.

உரவுப்பொதியும் உபாயம் என்பது நீங்காமலுள்ளே பொதிதற்கு வழியாவ தென்றபடி.

உணர்வு கற்றதனாலனு போகங் கண்டாரே என்பது அறிவு சென்றுறும்படியாகக் கற்று அதனாலே பரமானந்த சுகம் சித்திக்கும் படியான தலத்தைக் கண்டவர்கள் அல்லரோ நீங்காமலுபாயங்கண்டவர்க ளென்றவாறு.

(குறிப்பு) இச் செய்யுளை சமாஜப் பதிப்பு முதலிய சில பதிப்புகளில் காண முடியவில்லை.

உண்ணாடி யைவரை உள்ளே யடக்கிட்டு
விண்ணாடு கின்ற வெளியை விரவுவான்
அண்ணாந்து பார்த்தைவர் கூடிய சந்தியுட்
கண்ணாடி காணுங் கருத்ததென் றாரே.

(என்பது) பஞ்சாட்சரங்களை யுள்ளே யடக்கிக் கொண்டு மேலே செல்லுகையே தாற்பரியமான அக்கினி தேசத்தை வளரும்படி நோக்கி ஐம்புலன் கூடப்படுவது மாய் நாற் சந்தியுமா யிருந்துள்ள சிரோ மத்தியங் கண்ணாகக் கொண்டு பரமசிவனைக் காணுமது கருத்தென்றே பொருந்துங்கோளென்றவாறு.

உண்ணாடி யென்றது உள்ளாஞ்சுழி முன் நாடியிலே யென்றபடி.

ஐவரையுள்ளே யடக்கிட்டு என்பது பஞ்ச பூதங்களுக் குற்பத்தியாய்ப் பஞ்சாக்கரத்தைத் தன்னிடத்தே யடக்கி யிற்க என்றபடி.

விண்ணாடுகின்ற வெளியை விரவுவான் என்பது மேலே செல்லுகையே தாற்பரியமான அக்கினி தேசத்தைக் கூட்டிக் கொள் ளென்றபடி.

அண்ணாந்து பார்த்து என்பது இந்த வக்கினி வளரும் படி பார்த்தென்றபடி.

ஐவர் கூடிய சந்தியு ளென்றது பஞ்சேந்திரியங்கள் கூட்டப்பட்ட சிரோமத்தியமான சந்தியிலே என்றபடி.

கண்ணாடி காணும் கருத்த தென்றாரே என்பது இவ் விடம் இடமாகக் கொண்டு நிருத்தம் பண்ணுகிற பரம சிவனைக் காணுமது கருத்தென்றே பொருந்துங்கோ ளென்றவாறு.

(குறிப்பு) இச் செய்யுள் சமாஜப் பதிப்பில் 2223 என்ற எண்ணுடையது! வேறு உருவத்தில் அச்சிடப் பட்டுள்ளது. உண்மை, யோக நூல் வல்லோர்க்கே புல னாமென்பது உறுதி. அச் செய்யுள் வருமாறு:-

உண்ணாடும் ஐவர்க்கு மண்டை யொதுங்கிய
விண்ணாட நின்ற வெளியை வினவுறில்
அண்ணாந்து பார்த்தைவர் கூடிய சந்தியிற்
கண்ணாடி காணுங் கருத்ததென் றானே.

என்பதாம்.

அஞ்சுள யானை யகத்தினி னிற்பன
வைஞ்சுக்கு மஞ்செழுத் தங்குச மாவன
வஞ்சையுங் கூட வடக்கவல் லார்கட்கே
யஞ்சாம லாதி யகம்புக லாமே.

(என்பது) வேண்டின விடங்களிலே கொண்டு போய்த் தட்டுப் படுத்துகிற புலனாகிற யானைகள் ஐந்தையும் பஞ்சாக்கரமாகிற வங்குசத்தாலே குருவருளிச் செய்த வுபாயத்தின்படி மீட்டி இவ்வுடம்பாகிற கூடத்திலே நிறுத்திக் கொள்ள வல்லார்கட்கு இந்தப் பூமியிடத்திலே மீண்டுப் பிறக்குமென்கிற பயமற்றுப் பரம சிவனிடத் திலே பொருந்தலாமே யென்று அஞ்செழுத்தின் பெரு மையை வியந்து சொல்லியது என்றபடி.

அஞ்சுள யானை அகத்தினி னிற்பன என்பது அகத்திலே பொருந்தி நின்று தனக்கு வேண்டின விடங்களிலே இந்த சரீரத்தை யெடுத்துக் கொண்டு ஒன்றுக்கும் அடங்காமை நிற்க வற்றுமாயிருக்குள்ள புலனுகிற யானைகளஞ்சுள வென்றபடி.

அஞ்சுக்கு மஞ்செழுத் தங்குச மாவன என்பது ஐந்து பூதங்களுக்கும் தோற்றரவு பஞ்சாக்கரத்திலே யாதலால் இந்தப் பூதத்தின் காரியமான சனநாதி முதலைம்புலனை யுமீட்கைக்குபாயமிதுவே யாகலில் அங்குச மென்னத் தக்க தென்றபடி.

அஞ்சையுங் கூடத்தடக்க வல்லார் கட்கென்றது குரு வருளிச் செய்த வுபாயத்தின்படி மேற் கொண்டிந்த வங்குசங் களாலே திரித்து எழுவாசலை யுடைய கூடத்திலே புகுத விடவல்லார்க் கென்றவாறு.

அஞ்சாதே யாதி அகம் புகலாமே என்றது மீண்டுப் பிறக்க விறக்க என்கிற பயமற்றுப் பரமசிவனுடைய விடத்திலே பொருந்தி விடலாமே யென்றவாறு.

(குறிப்பு) இச் செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிற பதிப்புகளில் வேறு உருவத்தில் வந்துள்ளமையைக் கீழே காண்க.

அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே

இது சமாஜப் பதிப்பில் 977 ஆம் செய்யுளாகும். மேலும் இப் பதிப்பிலேயே 2026 ஆம் செய்யுளும் வேறு திரிந்த உருவத்தில் வந்துள்ளமையை அறிந்து கொள்க.
அது வருமாறு:—

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே

என்பதாம். இவ்வாறு பாட பேதங்கள் திரு மந்திரத்தில் நிறைய உள்ளன. அவற்றையெல்லாம் ஆய்ந்து தக்க யோக நூல்வல்லார் துணை கொண்டு ஒரு சிறந்த திருமந்திர நூல் வெளியிடின் சமய உலகுக்கு மிகவும் பயன்படும். ஒரு மேலான தமிழ் நூலுக்குப் புத்துயிர் கொடுத்த பெருமையும் அவ் வெளியீட்டாளரைச் சேரும். தக்கார் முயன்று ஆவன செய்வார்களாக.

# அருள்மொழியரசு வாழ்க

(துணையாசிரியர்)

அருள்மொழி அரசு கிருபாநந்தவாரியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு குறித்து சமாஜம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

திரு. வாரியார் அவர்கள் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள காங்கேயநல்லூரில் பிறந்தார்கள். பரம்பரையாகச் சைவப்பற்றில் திளைத்த குடும்பத்தில் கருவிலேயே திரு வாய்க்கப்பெற்று தோன்றினார்கள். ஆதலின் அவர்கள் வாக்கு வன்மைப்பெற்றுள்ளது. அயரா முயற்சியுடன் இளமை தொட்டே இறைவன் பொருள்சேர் புகழைப் பேசுவதொன்றினையே தம் பணியெனக் கொண்டுள்ளார்கள். உலகத்தில் அரசியல், மொழி, சமயம் ஆகிய பல துறைகளில் இவர்கள் சமயத்துறைப் பணி ஒன்றினையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் நாநலம் பெற்று நிறைமொழி மாந்தராய் விளங்கிவருதலால் மக்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளப் பல்வேறு நலன்கருதியும் இவர்களிடம்

செல்கின்றனர். இவர்கள் ஏறக்குறைய முப்பதாண்டுகளாக நெல்லைமாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரத்திற்கு வந்து பேசும் வாய்ப்பினைப் பெற்றவர்கள். அதிலும் என்னை உருவாக்கிய அருள்திரு சுவாமிநாத சற்குருஎன்ற பெரியாரால் நிறுவப்பெற்ற சுந்தரவிநாயகர் திருக்கோயிலில்தான் அம்பையில் முதன்முதல் சொற்பொழிவு நிகழ்த்தியதாக எண்ணம். அன்று முதல் இன்று வரை இவர்களின் அசையா அன்பின் பெருக்கால் இறைவன் படிப்படியாகக் கருணைபுரிந்ததிறனை எண்ணும்போது 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்', 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' முதலிய ஆன்றோர் வாக்குகள் எவ்வளவு உறுதி வாய்ந்தவை என்று எண்ணி அகமகிழ வேண்டி வருகின்றது.

திரு. வாரியார் அவர்கள் சொற்பொழிவுகளில் எல்லாச் சுவைகளும் தென்படும். எல்லா நிலை மக்களுக்கும் அவரவர் தரத்திற்கேற்ப சிலச்சில புதுமைக் கருத்துக்களை அன்றன்றையப் பிரசங்கத்தில் வாரி வழங்குவார். பக்தி சுவையைப் பற்றி மிக ஆழமாகப் பேசுவார். 'கடவுள் இடையாது' என்று கூறும் உலோகாயதவாதியும் கழிவிரக்கப்பட்டுத் திருந்தும் நிலையில் அவர் பேச்சு அமைந்திருக்கும். அரசியல் கட்சிகளில்—அவற்றிலும் சிலர் பேசும் கூட்டத்திற்குத் தான் மக்கள் பெருவாரியாகச் செல்வதுண்டு. மக்கள் அதிகமாகக் கூடாதவிடம் சமய விரிவுரைக் கூட்டமே. இந்நிலையில் இவர்கள் சமய விரிவுரையாற்றும் பொழுது வரும் கூட்டத்தைக் கண்டோர் வியக்காமலிருக்க முடியாது. இவர்கள் தம் வாழ்விலும் மிகவும் ஒழுங்கான நியதிகளைப் பெற்றவர்கள். 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்ற முறைப்படி அருட்செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் தம் குடும்பத்தவர் எல்லோருக்கும் வாரி வாரி வழங்கியுள்ளார் நெருங்கியவர்கள் யாவராயினும் அவர்களுக்கும் கொடுக்கும் வள்ளல் ஆவார். மாதந்தோறும் முதல் வாரத்தில் பல அநாதைச் சிறுவர்களுக்கும் படிக்கும் மாணவர்களுக்கும் ஆதரவற்ற பெரியோர்களுக்கும் பணம் அனுப்புவதை இன்றும் காணலாம்.

அந்தக்காலத்தில் அரசர்கள் நம் திருக்கோயில்களைத் திருப்பணிசெய்து நன்முறையில் வைத்துள்ளனர், இடைக் காலத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் இக் கோயில் திருப்பணிகளில் மிகமுனைந்து ஈடுபட்டனர். தற்போது அவர்கள் கடல்கடந்து வியாபாரம் செய்துவந்த நிலை மந்தமாயிற்று. ஆகவே திருப்பணி ஈடுபாடும் குறைந்துபோயிற்று. இத்தகையசூழ்நிலையில் நம்வாரியார் அவர்கள் சைவவுலகுக்குக் கிடைத்திருப்பது ஒருபெரும் பேறு. அவர்கள் தம் நாநலத்தால் எத்துணை அன்பர்களைத் திருப்பணிகளிலீடுபடச் செய்துள்ளார்கள்! தங்கள் பேச்சால், மூச்சால் எத்தனை கோயில்களுக்குத் திருப்பணி செய்துள்ளார்கள்! சிறப்பாகக் காங்கேயநல்லூர், வயலூர் வடலூர், வள்ளிமலை சென்னை சண்முகஞானபுரம்முதலிய எண்ணிறந்த கோயில்களின் திருப்பணிகளைக் கூறலாம். எத்தனை இளைஞர்களுக்கு ஊக்கப்படுத்தி 'வேலைவாய்ப்பு வாங்கித் தந்திருக்கின்றார்கள்! எத்தனை குடும்பங்களைத் தம் சொல்லாற்றலாலேயே வாழவைத்திருக்கிறார்கள்! இவைகளையெல்லாம் நான் நேராகவே அறிந்துள்ளேன். குறியெதிர்ப்பு கருதி அவர்கள் ஒன்றும் செய்வது கிடை யாது. அப்படியே குறியெதிர்ப்பு என்றிருக்குமேயானால் அது பிறர் நலம் அல்லது பொதுநலம் கருதியதாகவே யிருக்கும். தந்நலம் கருதி அவர்கள் வாழ்வில் என்றும் எதுவும் செய்தது கிடையாது.

நம் முன்னையோராய மறைமலை யடிகள் ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை, அருள் திருஞானியார் அடிகள், திரு. வி. க. போன்றோர் வரிசையில் ஒருவராய் திரு. வாரியார் அவர்கள் இக்காலத்து வாழ்ந்து வருவது நம் சமயத்திற்குக் கிடைத்த நற்பேறு ஆகும். நம் சமாஜமும் அவர்களை சமயம் வாய்த்த போதெல்லாம் பயன்படுத்திக் கொள்கின் றது. பல மாநாடுகளில் அவர்களுக்கெனத் தனிப்பேச்சே ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். அண்மையில் சிதம்பரத் தில் நிகழ்ந்த வயிரவிழாவில் அவர்களின் ஒப்பற்ற தலை மையே மாநாட்டை அணிசெய்த தென்று கூறலாம். அருள்திரு. வாரியார் அவர்கள் என்றும் இளையோனை

வணங்கும் ஒப்பற்ற பெரியார் ஆதலின் அவர்கள் எல்லா நலங்களையும் பெற்று நீடுவாழ்வார்கள் என்பது றுதி.

அவர்கள் வாழ்வில் செய்துள்ள பணிகளில் சமாஜத்திற்குள்ள பகுதி இன்னும் எஞ்சியிருக்கின்றது. காலம் சென்ற திரு. மா.பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களை, நம் சமாஜத்திற்குக் கட்டடம் நிறுவி ஒருதலை சிறந்த நிலையம் ஆக்க வேண்டாவா? என்று யாராவது கேட்டால் "அரண்மனைக்காரத் தெருவிலுள்ள 'கத்தோலிக்கர் மையம்' போல் கட்டடம் வேண்டும், இல்லையேல் ஒன்றும் வேண்டாம்" என்று கூறுவார். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றதற்கேற்ப அவர் நீடு நினைந்து சென்றார். அத்தகையவர் போன்ற பெரியார்களின் எண்ணம் ஈடேற வாரியார் அவர்கள் முயற்சி சிறிது திரும்பினால் நலம் பயக்கும். கிறித்தவ நிலையங்கள் பலவிதங்களில் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. அம்மாதிரி நம் சமாஜப் பொருளாதாரப் பெருக்கிற்கு வாய்ப்பில்லை. இறைவனைவிட அடியார் எவ்வாறு சிறந்துள்ளவரோ அதுபோல கோயில்களைவிட அக்கோயில்களைப் பற்றி விளக்கம் கூறும் சமயச் சபைகள் இக்காலத்து அவசியம் வேண்டற்பாலன. ஆகவே அதற்கு ஆவன செய்யின் நலமாகும்.

இந்நற்காலத்து வாரியார் அவர்கள் நீடுவாழவேண்டும் எனப் போரூர் முருகன் அருள்பாலிக்க அவன் திருவடித்தாமரைகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

---

## மதிப்புரை

"திருத்தணிகைப் பெருமான் திருப்பதிகங்கள்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் திரு நா. ப. தணிகையரசு அவர்கள் ஆவர். தேவாரப் பண்கள் போன்று பழம் பஞ்சுரத்திலும் நட்டராகத்திலும் இந்தளத்திலும், காந்தார பஞ்சமத்திலும் குறிஞ்சியிலும் திருத்தாண்டக ரூபத்திலுமாக ஆறு பதிகங்கள் அறுபது பாக்களில் சிறந்த முறையில் மனத்தை உருக்குவனவாய் திருத் தணிகை முருகப் பெருமானைப் பற்றி ஆசிரியர் இயற்றியுள்ளார்.

வெளியிடுவோர்:— தணிகை வேல் நிலையம், 27. திருவள்ளுவர் புரம், சென்னை—21. விலை குறிக்கப் பெறவில்லை.

(அம்பை)

ஆதி சங்கரர் அருளிய சிவானந்த லகரி என்னும் நூல் வட மொழி சுலோகங் களுடன் (கிரந்த எழுத்து) தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுளும் உரையுமாக உள்ளது ஒன்று வரப்பெற்றோம். இம்மொழி பெயர்ப்புச் செய்யுளை தமிழ்ப் பண்டிதர் திரு' பு. ப. மாசிலாமணி முதலியார் அவர்கள் இயற்றியுள்ளனர். மிக அருமையாக வடமொழி சுலோகங்களின் பொருள் கெடா நிலையில் பாட்டாக இயற்றி யிருப்பது ஆசிரியரின் மொழிபெயர்ப்புத் திறனை யும் கவியியற்றும் திறனையும் தெள்ளிதின் விளக்கிக் காட்டுகிறது. அந் நூல் தக்கார் முகவுரைகளுடன் மதிப்பு ரைகளையும் கொண்டுள்ளது. விலை ரூ. 1-25. வேண்டுவோர் வித்துவான் ஜய செந்தில் நாதன், தமிழாசிரியர், பச்சை யப்பன் உயர்பள்ளி, காஞ்சிபுரம். என்ற முகவரிக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். தபாற் செலவு வேறு. (அம்பை)

1 திருப்போரூர்மாலை: சிதம்பர சுவாமிகள், அம்பை நூலக வெளியீடு, 0-40 காசு.

பிற்காலத் துதிநூல்கள் செய்தார் வரிசையில் திருப் போரூர் சிதம்பர சுவாமிகள் சிறப்பான இடம் பெறுகிறார். அவர் பாடிய மீனாட்சியம்மை கலிவெண்பாவும் திருப்போ ரூர்ச் சந்நிதி முறையும், தமிழ்நாடெங்கும் பிரசித்தி பெற்றுள்ளன. திருப்போரூர் மாலை சந்நிதி முறையில் பன்னிரண்டாம் பிரபந்தம்: 103 வெண்பாக்கள் உடையது. இதயத்தை நெகிழவைக்கும் சுவைமிக்க பக்திப் பாடல்கள். இதன்கண் உள்ள நாயேன் உன் சீரடிக்கு (4) இல்லறத் தான் அல்லேன் (7), வேல்கண்டேன் (25), ஏதுபிழை செய்தாலும் (32), நோவ உரையான் (79) முதலான பாடல்களைப் பாடாத முருக பக்தர் தமிழ்நாட்டில் இரார். இச் சிறு பக்திநூலை, சிந்தாந்தம் உதவிப் பத்திரிகாசிரியர் திரு. அம்பை சங்கரன் அவர்கள் முன்னுரை குறிப்புக்க ளோடு அழகாக அச்சிட்டு அம்பை நூலக முதல் வெளியீ டாக வெளியிட்டிருக்கிறார். பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் வாங்கிப் படித்து முருகன் அருளுக்குப் பாத்திரமாவார்களாக. (மு அ.)